# சீதன நடைமுறையும் அதற்கான இஸ்லாமிய மாற்றீடுகளும்

# The Dowry Practices and their Alternatives in Islam

A.M. Aashiq[1] & S. Haneef Ahamed[2]

Jamiah Naleemiah, Beruwala, Sri Lanka.
am.aashik547@gmail.com

## 01. ஆய்வுச்சுருக்கம்

திருமண நிகழ்வின் போது மணப்பென் வீட்டாரிடமிருந்து மனமகன் வீட்டார்கள் கேட்டுப் பெற்றுக்கொளளும் சீர்வரிசைகள் அனைத்தையுமே சீதனம் எனும் பதம் விளக்குகின்றது. இது பிற மத, கலாசாரத்தின் ஊடாக எமது முஸ்லிம் சமுதாயத்தில் உள் நுழைந்த ஒன்றாகும். ஆனாலும், இஸ்லாம் அதற்கு முற்றிலும் முரணானதாகும். இஸ்லாத்தில் மணமகன்தான் மணமகளுக்கு மஹர் கொடுத்து திருமணம் முடிக்க வேண்டும். ஆனால், எமது சமூகத்தில் இது மாறுபட்டுக் காணப்படுகின்றது. இஸ்லாம் சீதனத்தை ஒழிக்க பல நல்ல மாற்றீடுகளை வழங்கியுள்ளது. வாரிசுரிமைச் சொத்தைச் சரியாகப் பிரித்துக்கொடுத்தல், மஹர் கொடுத்து திருமணம் முடித்தல் மற்றும் பரஸ்பரம் அன்பளிப்புகள் வழங்குதல் என்பன அவற்றுள் சிலவாகும். எனினும், இம்மாற்றீடுகள் சமூகத்தில் நடைமுறைப்படுத்தாமையால் பல சமூக, கலாசாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பலரின் குடும்பக் கட்டமைப்பு சீர்குலைவதற்கும், குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுவதற்கும் இது காரணமாக அமைகின்றது. எனவே, இந்த ஆய்வானது சீதனம் பற்றிய பொதுவான புரிதலையும், இலங்கை முஸ்லிம்களிடத்தில் அதன் நடைமுறை பற்றியும், இஸ்லாம் அதனை முற்றாக ஒழிக்க ஏற்படுத்தியுள்ள மாற்றீடுகளையும் விரிவாக முன்வைக்கின்றது. அளவு சார், பண்பு சார் ஆய்வு முறையில் அமைந்த இவ்வாய்வுக்காக முதலாம் நிலைத் தரவுகளாக நேர்காணல், கலந்துரையாடல், அவதானம் என்பவற்றின் ஊடாக தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு இரண்டாம் நிலைத்தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தள ஆக்கங்கள் என்பவற்றின் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

## 02. திறவுச் சொற்கள்

சீதனம், இஸ்லாமிய மாற்றீடு, வாரிசுரிமை, அன்பளிப்பு, மஹர்,

## 03. ஆய்வின் அறிமுகம்

இபாதத் விடயங்களில் ஓரளவு கரிசணையுள்ள முஸ்லிம் சமுகம் முஆமலாத்,முனாகஹாத் போன்ற வாழ்வின் நடைமுறைச் செயற்பாடுகளில் இஸ்லாமிய சட்டங்களைப் பின்பற்றுவதில்லை. இதனால் எம் வாழ்வில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக சீதனமும் அதன் மூலம் ஏற்படும் பாதகமான விளைவுகளையும் குறிப்பிட முடியும்.

**சீதனம் என்பது பெண் வீட்டாரிடம் இருந்து மணமகன் வீட்டார் கேட்டுப்பெறும் பணம்,நகை அல்லது சொத்து போன்றவற்றை குறிக்கும்.** முஸ்லிமல்லாத மக்களிடம் இஸ்லாமைப் பற்றி நாம் எடுத்துச் சொல்லும்போது அவர்கள் எழுப்புகின்ற சந்தேகங்களில் இதுவும் ஒன்று.முஸ்லீம்கள் வாங்கும் அளவுக்கு மற்ற சமூகங்களில் அதிக சீதனம் வாங்கும் பழக்கம் இல்லை முஸ்லிம்கள் ஏன் அதிகசீதனம் வாங்குகிறார்கள் என்று கேட்கின்றனர்.

இவர்கள் இஸ்லாத்தை கடைபிடிக்காத காரணத்தால் இப்படிப்பட்ட கொடுமையான காரியத்தை செய்கிறார்கள் என்று கூறுவதைத் தவிர வேறு பதில் சொல்ல முடியாது சீதனத்தால் ஏற்படும் விளைவுகளையும் இது குறித்து இஸ்லாம் கூறுவதையும் மக்கள் அறியாத காரணத்தால் இந்த பாவத்தை சர்வ சாதாரணமாக செய்கின்றனர். எனவே, சீதனம் பற்றிய மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நல்லெண்ணத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இப்படியான சமுகத்திற்கு எல்லா வகையிலும் அழிவை ஏற்படுத்தக்கூடிய சீதனத்திற்கான நடைமுறைத்தீர்வு இதுவரையில் முன்வைக்கப்படவில்லை.இதன் காரணமாக சமுகத்தில் ஏற்றத்தாழ்வு நிலவிவருவதை எம்மால் உணர முடிகின்றது.ஆகையால் இச்சீதனத்திற்கான நடைமுறைத்தீர்வை இஸ்லாமியக்

கண்ணோட்டத்தில் முன்வைப்பதன் மூலம் சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வை குறைத்து சிறந்த பொருளாதார நிலையை உருவாக்க முடியும்.

## 04. ஆய்வுப்பிரச்சினை

சீதனம் பற்றிய புரிதல், இஸ்லாமிய செல்வப்பங்கீட்டு வழிகாட்டல்கள், சீதனத்தை ஒழிப்பதற்கான இஸ்லாத்தின் மாற்றீடுகள் ஆகியவற்றில் இலங்கை முஸ்லிம் சமூகம் சரியான புரிதலை கொண்டிராத நிலையை அண்மைக்காலமாக பலராலும் உணரமுடிகின்றது. இதன் உண்மைத் தன்மையை கண்டறிவதோடு சில நடைமுறைத்தீர்வுகளை எவ்வாறு முன்வைக்க முடியும் என்பதே இங்கு ஆய்வுப் பிரச்சினையாக எடுத்தாளப்பட்டுள்ளது.

## 05. ஆய்வின் முக்கியத்துவம்

சீதனம் முஸ்லிம் சமூகத்தின் வழக்காறாக மாறிவருகின்ற சமயத்தில் அதனால் சமூகத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் பாதகங்கள் ஏராளம்.சீதனம் சமூகத்தில் இருந்து களையப்பட வேண்டும் எனக்கூறும் நாம் அதனை ஒழிப்பதற்கான எந்தவொரு நடைமுறைத்தீர்வினையும் முன்வைக்கவில்லை.இந்த ஆய்வானது அந்த இடைவெளியை பூரணப்படுத்தும் என நான நம்புகின்றேன்.

இந்தவகையில் இந்தஆய்வானது படித்தவர்கள் தொடக்கம் பாமரர்கள் வரை பயனளிக்கும் என்பதுடன் குறிப்பாக பெற்றோர் பிள்ளைகளுக்கு பிரயோசனமாக அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

## 06. ஆய்வின் நோக்கங்கள்

1. சீதனம் பற்றிய தெளிவான புரிதலை வழங்கி அது பற்றிய இஸ்லாமிய நிலைப்பாட்டை தெளிவுபடுத்தல்.
2. சீதன ஒழிப்பில் இஸ்லாம் முன்வைத்துள்ள தீர்வுத்திட்டங்களை முன்வைத்தல்.
3. சீதனத்தை ஒழிப்பதற்கான ஆலோசனைகளையும் முன்மொழிவுகளையும் வழங்குதல்.

## 07. ஆய்வுக்கான எடுகோள்கள்

1. சீதனம் இஸ்லாமிய ஷரீஆவின் வரையறைகளுக்கு அப்பாற்பட்டது.
2. சீதனத்தை இஸ்லாம் அனுமதிக்கவில்லையென்றால் இஸ்லாம் கூறும் மாற்றீடுகள் யாவை?

## 08. ஆய்வு முறைமை

இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் நிலைத்தரவு மூலாதாரங்களினைப் பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.முதலாம் நிலைத்தரவுகளாக நேர்காணல் (Interview), கலந்துரையாடல் (Discussion) அவதானம் (Observation) மற்றும் வினாக்கொத்து (Questionnaire) போன்றவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தள ஆக்கங்கள், அறிக்கைகள், விவாகப் பதிவுகள் போன்றவற்றின் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டுள்ளது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளினது தரவுப் பொதியைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட 50 பேரிடம் வினாக்கொத்துக்கள் வழங்கி தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## 09. ஆய்வு எல்லை

இவ்வாய்வானது இலங்கை முஸ்லிம் சமூகத்தில் நடைமுறையில் உள்ள சீதன ஒழுங்கு பற்றி பொதுவாகவும், கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மத்தியில் அதன் நடைமுறை எவ்வாறு காணப்படுகிறது என்பது பற்றி குறிப்பாகவும் ஆய்வு செய்கின்றது.

## 10. இலக்கிய மீளாய்வு

சீதனம் தொடர்பாக பல நூல்கள்,ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் ஆக்கங்கள் காணப்படுகின்றன.

01. வரதட்சணையும் வாரிசுரிமையும்: ஒரு தீர்வுத்திட்டம் - M.M.Najath

02. சீதனமும் இஸ்லாமிய சமூகம் எதிர்கொள்ளும் சவால்களும் தீர்வுகளும்; சம்மாந்துறை பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் சமூகவியல் ஆய்வு – M.Nusrath Banu, A.G.Farooza, A.M.Yumaira Banu

03. முஸ்லிம்களின் திருமணத்தில் சீதனத்தின் செல்வாக்கு – ஓர் இஸ்லாமிய நோக்கு (புல்மெட்டைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு) M.Y.Jameela, A.H.M.Isfar

04. பெண்களை வதைக்கும் வரதட்சணை - பாத்திமா ஜெஸீலா

05. முஸ்லிம் திருமணத்தில் மஹரும் அன்பளிப்பும், கலமுனைக்குடி பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு – எம்.ஐ.எம்.ஜஸீல், எம்.ஐ.றினோஸா

06. இலங்கை முஸ்லிம் சமூகத்தில் சீதனமும் அதன் நடைமுறையும் (அம்பாறை மாவட்டத்தை மைய்படுத்திய ஆய்வு) - எம்.ஏ.எஸ்.எப்.ஸாதியா பௌஸர், எஸ்.ஏ.பெரோஸியா,

இந்த ஆய்வுகளிலிருந்து எனது ஆய்வானது பின்வரும் விடயங்களில் வேறுபடுகின்றது.

1. சீதனத்துக்கான தீர்வாக வாரிசுரிமையை மாத்திரம் குறிப்பிடாமல் அன்பளிப்பு,மஹர் போன்றவற்றையும் இணைத்து முன்வைத்தல்.
2. கள ஆய்வில் ஈடுபடல், கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மத்தியில் அதன் நடைமுறை எவ்வாறு காணப்படுகிறது என்பது பற்றி அறிய வினாக்கொத்து வழங்கல்.
3. சீதனம் தொடர்பான சந்தேகங்களையும் அவற்றிற்கான தீர்வுகளையும் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் முன்வைத்தல்.

## 01. சீதனம் பற்றிய புரிதல்

### 1.1. சீதனம் : ஓர் அறிமுகம்

சீதனம் பற்றிய முழுமையான புரிதல் நம்மில் எல்லோரிடமும் இல்லை என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் நம்மில் பலர் சீதனம் என்ற சொல்லிற்கு தங்களது சுயலாபங்களுக்கு பொருத்தமான வகையில் வரைவிலக்கணம் வழங்குகின்றனர். சீதனம் வரதட்சனை என்றும் அழைக்கப்படும். சமஸ்கிருத மொழியில் **வரன்** என்றால் **மணமகன், தட்சணை** என்றால் **காணிக்கை**. மணமகனுக்கான காணிக்கை என்று பொருள்.[1] குருதட்சணை போன்று காணிக்கையாக உருவானது தான் பிற்காலத்தில் தற்போது சொல்லப்படும் 'வரதட்சணை'யாக பரிணாம வளர்ச்சியடைந்திருக்கிறது. பொதுவாக சீதனம் என்ற சொல்லை ஆங்கிலத்தில் **DOWRY** என்கின்றனர். இதற்கான பொருளை ஆங்கில அகராதிகள் பின்வருமாறு குறிப்பிடுகின்றன. **"சீதனம் என்பது திருமணத்தின் போது பெண் வீட்டாரிடம் இருந்து மணமகன் வீட்டார் கேட்டு பெறும் பணம், நகை அல்லது சொத்து போன்ற அனைத்தையும் குறிக்கும்"**[2]

நம்மில் சிலர் ஏதோ பணமாக கொடுப்பது மட்டுமே சீதனம் என்று நினைக்கின்றனர். அது தவறு. இதன் காரணமாக சிலர் பணம் தவிர்த்து ஏனைய வாகனம், வீடு போன்றவற்றை பெண் வீட்டாரிடம் இருந்து கேட்டு பெற்றுவிட்டு சீதனம் பெறவில்லை என விதண்டாவாதம்

[1] வரதட்சணை – ஒரு யதார்த்த ஆய்வு, L.M.A. முகம்மது புகாரி, திருச்சி

[2] கா.ஹுஸைன் கனி பாகவி, இஸ்லாமிய பார்வையில் வரதட்சனை, பக்:2

புறிகின்றனர். இது முற்றிலும் தவறானதாகும். சுருக்கமாக சீதனம் என்பது பெண் வீட்டாரிடம் விருந்து மணமகன் கேட்டுப் பெறும் அனைத்து விதமான சொத்தையும் குறிக்கும்.

இந்த சீதன நடைமுறையில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. சில காரணிகள் அவற்றின் அளவை உயர்த்துகின்றன. சில காரணிகள் குறைக்கின்றன. மணப் பெண்ணின் அழகு, கல்வி, பட்டப்படிப்பு, வேலைவாய்ப்பு, சமூகத்தில் தனிப்புகழ், தனிப்பட்ட சாதனை, தந்தையின் சொத்துக்கு ஒரே வாரிசாக இருத்தல் போன்றவை அனைத்தும் சீதனத்தில் பெரும் அதிகரிப்பை ஏற்படுத்துகின்றன. மேலும், மணமகனுக்கு இது இரண்டாம் திருமணமாக இருத்தல், மணமகன் அவலட்சணமாக இருத்தல், அறிவற்றவராக இருத்தல், தொழில் புரியாது இருத்தல், வயது கூடியவராக இருத்தல், அங்கவீனமுற்று இருத்தல் போன்றவையும் சீதனத்தை குறைக்கும் காரணிகள் ஆகும். ஏனெனில், இங்கு சீதனம் மணப்பெண்ணின் ‘‘தியாகமாக” அல்லது ‘‘சகிப்புத்தன்மை” ஆக மாற்றப்பட்டு மணமகன் வீட்டாருக்கு வழங்கப்படுகின்றது. இதற்கு மாற்றமாக இந்தக்குறைகள் மணப்பெண்ணிடம் காணப்பட்டால் சீதனம் அதிகரித்துக்கொண்டே செல்லும்.[3]

சமூகத்தில் பல குற்றங்கள் இழிவான கோணத்தில் பார்க்கப்பட்டாலும் சில குற்றச் செயல்கள் சமூக அங்கீகாரத்தை பெற்றுள்ளன. கொடிய விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு தீமைக்கு சமூக அங்கீகாரம் கிட்டினால் அது எத்தகைய பாதிப்புகளை உண்டாக்கி விடும் என்பதற்கு சீதனத்தை உதாரணமாக கூறலாம்.

## 1.2 சீதனமும் இலங்கை முஸ்லிம்களும்

சீதனம் என்ற பழக்கம் இன்று எமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் விட வேகமாக வளர்ந்து இன்று அழிக்க முடியாத அல்லது இந்த மனித சமுதாயம் மறைக்க முடியாத ஒன்றாக மாறிவரும் நிலையில் இது எப்படி தோன்றியது என்பது இன்றுவரை ஒரு புரியாத புதிராகவே இருந்து வருகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் பழங்காலங்களில் பெண்ணை திருமணம் செய்துகொள்ள இருக்கும் ஆண் தன்னால் இயன்ற பொன்னையோ பொருளையோ வழங்கி திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் இருந்து வந்தது. நாளடைவில் இந்திய நாட்டில் சிறுசிறு பகுதிகளை ஆண்டு வந்த மன்னர்கள் தங்களின் பெண்ணை மற்ற தேசத்து அரசர்களுக்கு திருமணம் செய்து கொடுக்கும்போது தங்களின் பெண்களுக்கு பொன்னும் பொருளும் கொடுத்து திருமணம் செய்து வைத்தனர். இந்தப் பழக்கம் இன்றுவரை அப்படியே தொடர்ந்து வருகின்றது எனலாம்.[4]

அவ்வாறு இலங்கையை பொருத்தவரையில் இலங்கை முஸ்லிம் சமூகம் பல்வேறு பகுதிகளில் சிதறி வாழ்கின்றனர். சிலர் சிங்கள சமூகத்துடனும் சிலர் தமிழ் சமூகத்துடனும் கலந்து வாழ்கின்றனர். குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்கள் தமிழ் சமூகத்துடன் கலந்து வாழ்கின்றனர். மேலும், ஏனைய மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களில் சீதனம் பெறும் முஸ்லிம்களை விட வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்பவர்களே மிக அதிகமானவர்கள் என்பதை ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. ஆய்வின் அடிப்படையில் 98% திருமணங்கள் அம்பாறை மாவட்டத்தில் சீதனத்துடன் இடம்பெறுகின்றன.[5] இதனடிப்படையில் இந்திய சமூகத்தில் பரவிய சீதனம் என்ற வழக்கம் இலங்கை தமிழ் சமூகத்தின் ஊடாக இலங்கை முஸ்லிம் சமூகத்தில் ஊடுருவியது என்று சொன்னால் அது மிகையாகாது.

## 1.3 இஸ்லாமும் சீதனமும்

இஸ்லாமிய சட்டங்களை மதித்து ஷரீஆவின் வரையறைகளைப் பேணி வாழும் ஒருவர் சீதனம் இஸ்லாத்துக்கு முரணானது என்பதை அறிந்து கொள்வார்.அது நகை, பணம், வாகனம், தோட்டம் என எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ள முடியாது. மஹர்

[3] https://sites.google.com/site/mrlalbajilal/a-4

[4] https://eluthu.com/kavithai/364664.html

[5] Dowry system and its practice among the srilankan muslim comminuty: With Special Reference to the Ampara District, Ms. Saadiya Fowzer, M.A.S.F. & Ms. Feroziya, S.A.

கொடுப்பதைப் பற்றி அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் கூறியதைப்போல் சீதனம் எடுப்பது என்பதைப் பற்றி குர்ஆனின் 114 அத்தியாயத்திலும் தேடினாலும் ஒரு வசனம் கூட கிடைக்கவில்லை.[6] நபி(ஸல்) அவர்கள் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும் போது, தோட்டம், திர்ஹம், தங்கம் இவை மட்டுமல்லாமல் இரும்பு, மோதிரம், கேடயம், ஏன் மனப்பாடம் செய்த சூராவைக் கூட மஹராக ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவங்களைப் பார்க்கிறோம். ஆனால் பெண் இத்தனை பவுன் நகை, சீர் வரிசை, பலகாரங்கள், பாத்திரங்கள் இவற்றுடன் கணவன் வீட்டுக்குச் சென்றாள் என்று எந்தக் குறிப்பும் இல்லை.

**"பெண்களை உங்களுக்கு ஆடையாகவும் உங்களை அவர்களுக்கு ஆடையாகவும் ஆக்கியுள்ளோம்."**[7] இந்தக் குர்ஆன் வசனம் திருமணம் செய்து கொள்வதை ஆடையணிந்து மானத்தை மறைப்பதற்கு ஒப்பாகக் கூறுகிறது. இதன் மூலம் சீதனம் கேட்பவனை தனது ஆடையை அணிய இலஞ்சம் கேட்பவனை ஒப்பாகக் கூறலாம். இதனை அடுத்து வருகின்ற சூரா பகராவின் 188 ஆவது வசனம் விளக்குகிறது. சீதனமானது அடுத்தவர் பொருளை அநியாயமாக அபகரித்ததாக கூறுகிறது.''**உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் சாப்பிடாதீர்கள். மேலும் நீங்கள் அறிந்து கொண்டு பிற மக்களின் பொருட்களிலிருந்து எந்த ஒரு பகுதியையும் அநியாயமாக சாப்பிடுவதற்கு அதிகாரிகளிடம் நெருங்காதீர்கள்"**

மேலும், நபி (ஸல்) அவர்களின் மகளான ஸைனப் (ரலி) அவர்களுக்கு கதீஜா (ரலி) அவர்கள் கழுத்தில் அணியும் மாலை ஒன்றைக் கொடுத்ததை சிலர் சீதனத்துக்கு ஆதாரமாக காட்டுகின்றனர். அவ்வாறே நபி (ஸல்) அவர்கள் பாத்திமா (ரலி) அவர்களுக்கு ஒரு விரிப்பு, தலையணை, தோல் துருத்தி, குவளை, இரண்டு மண் குடங்கள் போன்றவற்றைக் கொடுத்திருக்கின்றார்கள் என்பதை சீர்வரிசைகளைப் பெறுவதற்கு ஆதாரமாகக் காட்டுகின்றனர். இவை சீதனமோ, சீர் வரிசைகளோ அல்ல. மாறாக பெற்றோர் என்ற வகையில் நபிகளாரும் அவர் மனைவி கதீஜா (ரலி) அவர்களும் தம் மக்களுக்கு செய்த திருமண அன்பளிப்புகள் ஆகும். இதனை வைத்து சீதனம் இஸ்லாத்தில் உள்ளது என்பது அறிவீனர்களின் வாதமாகும்.[8]

## 1.4 சீதனத்திற்கு ஏதுவாய் அமையும் காரணிகள்

1. இஸ்லாத்தின் செல்வப்பங்கீடு பற்றிய அறிவின்மையும் அதனை நடைமுறைப்படுத்தாமையும்.
2. பெற்றோரின் நிர்ப்பந்தம்
3. குடும்ப மற்றும் சமூக அந்தஸ்த்து
4. கல்வி நிலை
5. பெண்களின் அறிவீனம்
6. சமூகம்


இவை அனைத்துக்கும் முதன்மையான காரணியை கண்டறிகின்ற போது சீதனத்தை இலகுவாக சமூகத்தில் இருந்து நீக்க முடியும். அதற்காக 50 வினாக்கொத்துகளை கொடுத்து முதன்மையான காரணம் எது என்ற தேடுதலில் ஈடுபட்ட போது 72% பேர் சீதனம் நடைமுறையில் இருப்பதற்கு முதன்மையான காரணமாக **இஸ்லாத்தின் செல்வப்பங்கீடு பற்றிய அறிவின்மையும் மேலும் அதனை நடைமுறைப்படுத்தாமையும்** எனும் காரணத்தை குறிப்பிடுகின்றனர்.[9]

[6] http://www.islamiyapenmani.com/2015/04/blog-post_20.html?m=1

[7] சூரா பகரா :187

[8] http://aleemqna.blogspot.com/2014/06/blog-post_9483.html?m=1

[9] வினாக்கொத்து,2020




## 1.5 சீதனத்தினால் ஏற்படும் விளைவுகள்

1. பொருளாதாரப் பிரச்சினைகள்.
2. முதிர் கண்ணிகளின் தோற்றம்.
3. குடும்பக் கட்டமைப்பு சீர்கெடல்.
4. உளவியல் ரீதியான பிரச்சினைகள்.
5. விவாகரத்து இடம்பெறல்.
6. பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்லல்.
7. ஆண்களுக்குச் சுமை ஏற்படல்.
8. குடும்ப உறவுகளில் விரிசல்.
9. இஸ்லாமிய வழிகாட்டல்கள் புறக்கணிக்கப்படல்.
10. வாரிசுச்சொத்துக்களை முறையாகப் பங்கிட முடியாமை.

# 02. சீதன நடைமுறைக்கான இஸ்லாத்தின் மாற்றீடுகள்

## 2.1 சீதன ஒழிப்பில் வாரிசுரிமை

முஸ்லிம் சமுதாயத்தின் ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வோடும் தொடர்புரும் சட்டமாக இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் காணப்படுகின்றது.இது நிம்மதியான தனிமனித வாழ்விற்கும் ஆரோக்கியமான குடும்ப வாழ்விற்கும் பிரச்சினைகளற்ற சமூக வாழ்விற்கும் துணைபுரிகின்றது.இதனை நடைமுறைப்படுத்துவது சன்மார்க்கக் கடமையாகும்.பர்ளான ஐவேளைத் தொழுகை,நோன்பு,ஹஜ் போன்ற அடிப்படை பர்ளுகளில் ஒன்றாகும்.மாறாக ஒருவர் செய்ய அடுத்தவரின் கடமைகளை நீக்கிவிடும் பர்ளுகிபாயாவோ, சுன்னத்தோ அல்ல.

இஸ்லாமிய வாரிசுரிமை சட்டத்தின் அவசியங்கள் அதன் சிறப்பம்சங்கள் என்பவற்றை தெளிவாகப் புரிந்து கொள்கின்ற போது சமூகத்தின் புரையோடிப் போயுள்ள பிழையான சம்பிரதாயங்களையும் தவறான காரியங்களையும் களைந்தெறிய முடியும்.இவ்வகையில் வாரிசுரிமையின் முக்கியத்துவம் அதனை பின்பற்றுவதன் அவசியத்தையும் இஸ்லாமிய ஷரீஆவின் ஒளியில் விளங்குதல் அவசியம்.

ஒரு தனி நபரின் சொத்துக்கள் என்றுமே அவன் உடமையாக இருப்பதில்லை.அவன் இறந்த பின் அவனது குடும்ப அங்கத்தவகௌிடையே பகிரப்பட்டு சமூக உடமையாக மாறுகின்றது.இதனால் குடும்ப அமைப்பும் சமூக அமைப்பும் சிறப்பாக இயங்க வழி ஏற்படுகிறது.

சொத்துக்களை பங்கீடு செய்யும்போது வசதி கூடியவர்களது உடமைகள் வசதி குறைந்தவர்ளுக்கு கிடைக்க வழி பிறக்கின்றது. இங்கு ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்படுவதானது

இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் சிறப்பம்சமாகும்.இவ்வாறான சமூக சீராக்கத்தில் தாக்கம் செலுத்தும் கலையான இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டக் கலையை முஸ்லிம் சமூகம் கற்றுக் கொள்வதில் ஆர்வம் கொள்ளாதிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

நபி ஸல் அவர்கள் வாரிசுரிமையைக் கற்று அதனை பிறருக்கும் கற்றுக்கொடுக்குமாறு ஏவியது மாத்திரமின்றி அது பற்றிய அறிவும் எமது சமூகத்திலிருந்து முதலாவதாக மறக்கடிக்கப்படும் என்றும் முன்னெச்சரிக்கை செய்தார்கள்.நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். **“நீங்கள் பராஇழ் வாரிசுரிமைச் சட்டத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்.மேலும் அதனைக் கற்றுக் கொடுங்கள்.ஏனெனில் அது அறிவின் அரைப்பகுதி அது மறந்து போகக் கூடியது.எனது சமூகத்திலிருந்து முதலாவது பிடுங்கியெடுக்கப்படக் கூடியது.”[10]**

இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம் சமூகம் எதிர்காலத்தில் வாரிசுரிமைச் சட்டம் பற்றிய அறிவின்மையால் தங்களுக்கு மத்தியில் சொத்து விடயத்தில் கருத்து வேறுபாடுகள் சண்டை சச்சரவுகள் ஏற்படுத்திக் கொள்வார்கள் என முன்னெச்சரிக்கை செய்தார்கள்.நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.நீங்கள் அல் குர்ஆனைக் கற்றுக் கொள்ளுங்கள்.பிறருக்கும் கற்றுக் கொடுங்கள் மேலும் வாரிசுரிமையைக் கற்றுக் கொள்ளுங்கள் அதனைப் பிறருக்கும் கற்றுக் கொடுங்கள்.ஏனெனில் நான் மரணித்து விடுவேன்.ஆனால் இது பற்றிய அறிவு உயர்த்தப்பட்டுவிடும்.எந்தளவுக்கென்றால் இருவருக்கு மத்தியில் சொத்தைப் பங்கிடுவதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைக்கும் யாரையும் அவர்கள் இருவரும் கண்டுகொள்ள மாட்டார்கள்.

மேற்கூறிய இரு ஹதீஸ்களிலிருந்தும் இஸ்லாத்தில் வாரிசுரிமையின் முக்கியத்துவத்தையும் அது அறிவின் பாதி,அதனைக் கற்றுக் கொடுப்பதும்,கற்றுக் கொள்வதும் ஓர் சன்மார்க்கக் கடமை.இது முஸ்லிம் சமூகத்தில் முதலாவதாக மறக்கடிக்கப்பட்டு குழப்பங்களையும் ஏற்படுத்தும்.காலப்போக்கில் இதனை நடைமுறைப்படுத்தாது புறக்கணிக்கப்படும் என தெளிவாகிறது.இறைத் தூதரின் இவ்விரு அறிவிப்புக்களிலும் உண்மை நிலையை இன்று காண்கின்றோம்.அல்லாஹ்வையும் மறுமையையும் விசுவாசித்த முஸ்லிம் சமூகம் வாரிசுரிமை அறிவை நடைமுறைப்டுத்தி ஆரோக்கிக்கியமாக வாழ மறந்து விட்டது.

இலங்கை முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் செல்வ பங்கீட்டில் இஸ்லாமிய வழிமுறை குறிப்பாக வாரிசுரிமை பின்பற்றப் படுவதில்லை என்பதே மிகத் தெளிவான உண்மை.[11] ஆனால் இஸ்லாம் எமக்கு காட்டித்தந்த வழிமுறைகள் எப்போதும் நீதியானவை, ஒழுங்கானவை, எக்காலத்திற்கும் பொருத்தமானவை. அல்குர்ஆன் பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையேயான வாரிசுரிமை சட்டத்தை மிகத்தெளிவாக குறிப்பிடுகின்றது.

“உங்கள் மக்களில் ஒரு ஆணுக்கு இரண்டு பெண்களுக்குக் கிடைக்கும் பங்கு போன்றது கிடைக்கும் என்று அல்லாஹ் உங்களுக்கு உபதேசிக்கின்றான். பெண்கள் மட்டும் இருந்து அவர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டு இருந்தால் அவர்களுக்கு இறந்து போனவர் விட்டுச் சென்றதில் மூன்றில் இரண்டு பாகம் கிடைக்கும். ஆனால் ஒரே பெண்ணாக இருந்தால் அவள் பங்கு பாதியாகும் இறந்தவருக்கு குழந்தை இருக்குமானால் இறந்தவர் விட்டுச் சென்றதில் ஆறில் ஒரு பாகம் (அவரது) பெற்றோர் ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால் இறந்தவருக்கு குழந்தை இல்லாதிருந்து பெற்றோர் மாத்திரமே வாரிசாக இருந்தால் அவர் தாய்க்கு மூன்றில் ஒரு பாகம் (மீதி தந்தைக்கு உரியதாகும்.)இறந்தவருக்குச் சகோதரர்கள் இருந்தால் அவரது தாய்க்கு ஆறில் ஒரு பாகம் தான்.(மீதி தந்தைக்கு சேரும்) இவ்வாறு பிரித்துக் கொடுப்பது அவர் செய்துள்ள மரண சாசனத்தையும் கடனையும் நிறைவேற்றிய பின்னர்தான். உங்கள் பெற்றோர்களும் குழந்தைகளும் இவர்களில் யார் நன்மை பயப்பது உங்களுக்கு நெருக்கமாக இருப்பவர்கள் என்று நீங்கள் அறிய மாட்டீர்கள். ஆகையினால்(இப் பாகப்பிரிவினை)அல்லாவிடமிருந்து வந்த கட்டளையாகும். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவனாகவும் மிக ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.”[12]

“இன்னும் உங்கள் மனைவியர் விட்டுச் சென்றதில் அவர்களுக்கு பிள்ளை இல்லாதிருந்தால் உங்களுக்கு பாதி பாகம் உண்டு.அவர்களுக்குப் பிள்ளை இருந்தால் அவர்கள் விட்டுச் சென்ற அவற்றிலிருந்து உங்களுக்கு கால் பாகம் தான்.(இதுவும்) அவர்கள் செய்திருக்கின்ற

[10] இப்னு மாஜா:2/908, தாருகுத்னி:4/67

[11] 95% வீதமானோர் ஏற்கின்றனர், வினாக்கொத்து, 2020

[12] சூறாநிஸா: 11

மரண சாதனத்தையும் கடனையும் நிறைவேற்றிய பின்னர் தான். தவிர உங்களுக்கு பிள்ளை இல்லாதிருப்பின் நீங்கள் விட்டுச் சென்றதிலிருந்து அவர்களுக்கு கால் பாகம்தான்.உங்களுக்குப் பிள்ளை இருந்தால் அப்போது அவர்களுக்கு நீங்கள் விட்டுச் சென்றதில் எட்டில் ஒரு பாகம்தான்.(இதுவும்) நீங்கள் செய்திருக்கும் மரண சாசனத்தை கடனையும் நிறைவேற்றிய பின்னரே தான்.தந்தை பாட்டன் போன்ற முன் வாரிசுகளோ அல்லது பிள்ளை பேரன் போன்ற பின்வாரிசுகளோ இல்லாத ஒரு ஆணோ அல்லது பெண்ணோ இவர்களுக்கு ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ இருந்தால் அவர்கள் இருவருக்கும் ஆறில் ஒரு பங்கு உண்டு.ஆனால் இதற்கு அதிகமாக இருந்தால் அவர்கள் மூன்றில் ஒரு பாகத்தில் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.இதுவும் அவர்களின் மரணசாசனமும் கடனும் நிறைவேற்றிய பின்னர்தான். ஆனால் மரண சாசனத்தை கொண்டு வாரிசுகள் எவருக்கும் அநீதி ஏற்படக்கூடாது.இது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்ட தாகும். இன்னும் அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவன் ஆகவும் மிக்க பெருமை உடையவனாகவும் இருக்கின்றான்."[13]

உண்மையில் இஸ்லாம் குடும்பத்தின் அனைத்து செலவினங்களையும் பொறுப்புகளையும் ஆணின் மீது சுமத்தியுள்ளது.இதனால் இஸ்லாம் பெண்ணை தொழில் புரியும்படி வற்புறுத்துவதை தடை செய்திருக்கிறது.ஆகவே தான் இஸ்லாம் வாரிசு சொத்தில் பெண்ணுக்குக் கிடைக்கும் பங்கில் இரண்டு மடங்கு ஆணிற்க்கு வழங்குகிறது ஆனால் எமது முஸ்லிம் சமூகத்தில் இது நடைமுறையில் இல்லை என்பதே மிகக் கசப்பான உண்மை.

எனது ஆய்வின் அடிப்படையில் நான் நடாத்திய கேள்விக்கொத்தின் அடிப்படையில் சீதனம் எடுப்பதற்கு முதன்மை காரணமாக மக்கள் கருதுவது இஸ்லாத்தின் செல்வப் பங்கீட்டிற்கான வழிமுறைகள் பின்பற்றப்படாமையாகும்.[14]

ஒரு குடும்பத்தில் பெண்பிள்ளை இருந்தால் குடும்பத்தில் இருக்கும் ஆண் பிள்ளை அப் பெண் பிள்ளைக்காக உழைத்து சொத்து தேடி வீடு கட்டி அவனுடைய திருமணத்தை தாமதப்படுத்தி கஷ்டப் படுவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இதனால் ஆணுக்கு எவ்வித சொத்தும் தந்தையிடமிருந்து செல்வதில்லை. ஆண் வெறுமையான கையுடனே திருமணம் செய்து கொள்வதற்கு தள்ளப் படுகின்றான். எந்த தேவையும் மற்ற பெண்ணுக்கு இவ்வளவு சொத்து சேர்த்து வழங்கப்படும்போது பொறுப்புள்ள நான் எங்கே போவது? இதனாலே ஆண் சீதனம் எடுக்க தள்ளப்படுகின்றான்.பெரும்பான்மையான ஆண்கள் இப்படியே சீதனம் எடுக்கின்றனர். அறிவு ரீதியாக சிந்திப்போமேயானால் குடும்பத்தின் அனைத்து பொறுப்புக்களும் உள்ளே ஆணிற்கே சொத்து சேர்க்க வேண்டும்.ஆனால் எதற்கு பெண்ணிற்கு சொத்து சேர்ப்பது என்று புரியவில்லை.இதனால்தான் வாரிசுரிமை சட்டத்தை உற்றுநோக்கினால் சொத்துப்பிரிப்பில் ஆண் பிள்ளைக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. இதனடிப்படையில் சொத்து பிரிக்கப்பட்டால் ஆண்பிள்ளைகள் சீதனம் கேட்டு பெண் வீட்டாரிடம் செல்ல மாட்டார்கள் என்பது உண்மை.

அவ்வாறே வாரிசுரிமைச் சட்டத்தின் அடிப்படையில் பெண்ணிற்கு என்று ஒரு பங்கு இருக்கிறது. அந்தப் பங்கு ஹலாலானது. இஸ்லாத்திலும் அனுமதிக்கப்பட்டது. வாரிசுப் பங்காக பெண்ணை வந்து சேர்வது சீதனமாக கருதப்படமாட்டாது. ஆனால் அது குறித்த பெண்ணை வந்துசேர வேண்டுமே அன்றி அதனை மருமகன் தனக்கு மாற்றிக் கொள்வது சீதன வழிமுறையாக அமையும்.[15] இப்படியாக வாரிசுரிமைச் சட்டம் நடைமுறைக்கு வருகின்றபோது சீதனம் இயல்பாக நின்றுவிடும் என்பதே நிதர்சனம்.

மேலும் இலங்கை முஸ்லிம் சமூகத்தை பொருத்தவறை மரணத்திற்கு பின்னர் சொத்து பங்கிடப்படுவதனை விட மரணத்திற்கு முன்னரே சொத்து பங்கிடப்படுகின்றது.[16] இப்படியாக மரணத்திற்கு முன்னர் சொத்து பங்கிடப்பட வேண்டும் என்றால் நான் இரண்டு நிபந்தனைகள் உள்ளன.

1. **நீதியாக பிரிக்கப்பட வேண்டும்.**
2. **வாரிசுரிமை அடிப்படையில் பிரிக்கப்பட வேண்டும்.**

[13] சூறாநிஸா: 12

[14] 72% ஆதரிக்கின்றனர், வினாக்கொத்து, 2020

[15] வரதட்சணை – ஒரு யதார்த்த ஆய்வு, L.M.A. முகம்மது புகாரி, திருச்சி

[16] 80% ஆனோர் இக்கருத்தில் இருக்கின்றனர், வினாக்கொத்து, 2020

இங்கும் வாரிசுரிமை சட்டம் மிக அவசியப்படுகிறது. ஆகவே வாரிசுரிமைச் சட்டம் சீதன ஒழிப்பில் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றது. வாரிசுரிமை சட்டம் நடைமுறைக்கு வந்தால் சீதனம் வெகுவிரைவில் சமூகத்தில் இருந்து ஒழிக்கப்படும் என்பது நிச்சயம்.

## 4.2 சீதனமும் மஹரும்

இஸ்லாம் மஹரை மிக அழுத்தமாக வலியுறுத்துகின்றது. **"மஹர் என்பது ஒவ்வொரு பெண்ணுக்கும் அவளை திருமணம் செய்யப் போகும் ஆண் கட்டாயம் கொடுக்க வேண்டிய கடமையாகும்."**[17]மஹர் என்பது மனைவி தன் கணவனிடம் தன்னை ஒப்படைப்பதற்கு பகரமாக அவரிடமிருந்து பெறுகின்ற ஈட்டுத் தொகையாக கருதப்படுகின்றது.அதனை திருமணத்தின் போது மணமகன் கொடுப்பது வாஜிபாகும்.

சீதனத்திற்கும் மஹரிற்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்தாலும் சீதனத்திற்கு எதிரான சொல் மஹர் எனலாம்.ஏனெனில் சீதனத்தை எவ்வாறு இஸ்லாம் தடுத்துள்ளதோ அவ்வாறே இஸ்லாம் மஹரை ஊக்குவிக்கின்றது.அப்படியான மஹர் பற்றிய அறியாமையே சீதனம் போன்ற தீங்கான வழக்காறுகளை எம் சமூகத்தில் தோற்றுவித்துள்ளது. இது பற்றிய தெளிவு நிச்சயமாக சீதனத்தை ஒழிக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

திருமணத்தை இஸ்லாம் பாலியல் தேவைக்காகவும், சந்ததி விருத்திக்காகவும் மட்டும் அனுமதிக்காது இபாதத்தாக அறிமுகம் செய்து அதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. திருமணமும் ஒருவகை இறைவணக்கம் ஆகும். திருமணத்தின் போது இறைவனின் கட்டளையை நிறைவேற்றுகின்றோம் என்ற எண்ணம் இருக்க வேண்டும். இதனால் தான் இறைவனின் அன்பும் அருளும் கிடைக்கும். இஸ்லாமிய திருமண ஒப்பந்தம் அக்துன் நிகாஹ் எனப்படுகிறது.நிகாஹ் நிறைவேறுவதற்கு சில விடயங்கள் முழுமையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும்.இவற்றுள் ஒன்று குறைந்தாலும் நிகாஹ் ஒப்பந்தம் நிறைவேறாது.இவ்வாறு திருமணம் நிறைவேறுவதற்கு அடிப்படையாக அமையும் விடயங்கள் முக்கியமான விடயமாக மஹர் கருதப்படுகிறது.

அல்லாஹ் கட்டளையிடுகின்றான்.அவர்களுக்கு குறிப்பிட்ட மஹரை அவர்களிடம் குறைவின்றி கண்டிப்பாக நீங்கள் கொடுத்து விடுங்கள்.நம்பிக்கை கொண்ட அடிமைப் பெண்களையும் அவர்களுடைய எஜமானின் அனுமதியை பெற்று சட்டப்படி அவர்களுக்குரிய மஹரையும் கொடுத்தே நீங்கள் அவர்களை திருமணம் செய்து கொள்ள வேண்டும்.

**"மஹரை மனமுவந்து கொடுக்க வேண்டும்"**[18]

**"நபியே! எவர்களுக்கு நீர் அவர்களுடைய மஹரை கொடுத்து விட்டீரோ அந்த உம்முடைய மனைவியரை நாம் உமக்கு ஹலாலாக்கி இருக்கின்றோம்"**[19]

### மஹரின் அளவு

இஸ்லாம் ஒரு பெண்ணைக் கண்ணியப் படுத்துவதற்காக மஹர் எவ்வளவும் கொடுக்கலாம் என்கிறது.அது ஒரு தங்கப் புதையல் ஆகவும் இருக்கலாம் என்பது குர்ஆனின் கருத்தாகும். ஆயினும் அது மஹரின் அதிகபட்ச அளவை நிர்ணயிக்கவில்லை.

**"பொற்குவியலையே மஹராக கொடுத்திருந்தாலும் அதிலிருந்து எதனையும் திரும்பி எடுத்துக்கொள்ளாதீர்கள்."**[20]

சில இடங்களில் மஹர் காலங்காலமாக ஒரே குறைந்த தொகை வழங்கப்படுகிறது. மேலும் இது ஒரு ரூபாயில் முடிவதாக அமைகின்றது. இந்நடைமுறை பற்றி அறிஞர்கள் இருவேறுபட்ட கருத்தை கொண்டுள்ளனர். முதலாவது பிரிவினர் அதை ஆமோதிப்போராவர். இதற்கு அவர்கள் அல்லாஹ் ஒருவன் அவன் ஒற்றை பட உள்ள கர்மங்களை விரும்புகின்றான் என்ற ஹதீஸை ஆதாரமாகக் கொண்டுள்ளனர். மற்றுமொரு சாரார் இதை மஹர் விடயத்தில் பொருத்திப் பார்ப்பது பொருத்தமற்றது எனவும் அவை அந்நியர்களிடம் இருந்து வந்த

---

[17] பிக்ஹுல் உஸ்ரா வகழாயா அல்-மர்ஆ, கலாநிதி யூஸுப் அல்-கர்ழாவி, பக்: 190

[18] சூறாநிஸா: 4

[19] சூறா அல்-அஹ்ஸாப்: 50

[20] சூறாநிஸா: 20,21

வழக்காக உள்ளது.உதாரணமாக தமிழர்கள் பணப் பரிமாற்றம் செய்யும்போது ஒற்றை என் அடிப்படையில் வழங்குகின்றனர்.இதிலிருந்து இவ்வழக்கு வந்திருக்கலாம் என்று கூறுகின்றனர்.மேலும் ஒற்றை எண் 1 மாத்திரமல்ல. அது 3 இல் முடியலாம்.7 இல் முடியலாம். 9 இலும் முடியலாம். இவ்வாறு ஒற்றை எண் அடிப்படையில் மஹர் கொடுக்க வேண்டும் என்பதற்கும் எந்த ஆதாரமும் இல்லை.நபி (ஸல்) அவர்கள் உம்மு ஹபீபா (ரழி) அவர்களுக்கு கொடுத்த தொகை 400 திர்ஹமாக இருந்தது.இது எந்த ஒற்றை எண்ணிலும் இடம் பெறவில்லை என்றும் குறிப்பிடுகின்றனர். மஹர் தொகைக்கு இத்தகைய உச்சவரம்பு இல்லை என்பதை அல்குர்ஆனும் நிறுவுகின்றது. எனினும் குறைந்த மஹர் இஸ்லாத்தில் சிறப்புக்கு உரியதாக கொள்ளப்படுகிறது. நபி ஸல் அவர்களின் பொன்மொழிகள் ஒன்று இவ்வாறு கூறுகின்றது.

**“பரக்கத்துக்குரிய மகத்தான பெண்ணொருத்தி குறைந்த மஹரை உடையவளாவாள்”**[21]

எனவே மஹர் என்பது கணவனின் பொருளாதார திறனுக்கு ஏற்ப இருக்க வேண்டும். மேலும் மணப்பெண்ணின் சமூக மதிப்பிற்கேட்ப நியாயமானதாக இருக்க வேண்டும்.இது பொதுவாக கணவன்-மனைவிக்கிடையே ஏற்படுகின்ற ஒரு உடன்பாட்டின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதுடன் மஹர் வழங்கும் அளவு இருசாராரையும் பாதிப்பதாக அமையக்கூடாது.அவ்வாறே கணவன் தன்னிச்சையாக மஹர் அளவை தீர்மானித்து விடவும் முடியாது.

## மஹரின் வகைகள்

இலங்கை முஸ்லிம் சமூகத்தில் பெரும்பாலும் மஹராக பணம் வழங்கப்படுவதையும் அதனை அடுத்து தங்கம் வழங்கபடுவதையும் நடைமுறையில் காணமுடிகின்றது.ஒரு பெண்ணுக்கு மஹராக பெறுமதியுள்ள விலைமதிக்கதக்க எப்பொருளையும் கொடுக்கலாம்.

‘‘ஒரு இரும்பு மோதிரத்தையாவது மணப்பெண்ணுக்கு மஹராக கொடுத்து மணம் முடியுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.’’[22]

‘‘ஸாபித் இப்னு கைஸ் அவர்களின் மனைவி ஒரு தோட்டத்தை மஹராக பெற்றிருந்தாள்.’’[23]

ஒரு சஹாபிக்கு நபி (ஸல்) அவர்கள் மஹர் கொடுக்க வசதி இல்லாத போது குர்ஆனின் சில அத்தியாயங்களை மணப்பெண்ணுக்கு கற்றுக் கொடுப்பதை மஹராக நிர்ணயித்தார்கள்.[24]

நபி ஸல் அவர்கள் ஸபிய்யா எனும் பெண்ணை அடிமை விடுதலை செய்ததை மஹராக்கி மணந்தார்கள் என அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். மேற்குறிப்பிட்ட ஹதீஸ்களின் மூலம் யாவற்றையும் மஹராக வழங்கலாம் என்கிறது இஸ்லாமிய சட்டம்.வழங்கப்படும் மஹர் பிரயோசனமாக இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட விடயங்களை கொண்டு மஹர் என்பது எவ்வளவு இஸ்லாத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை புரிந்து கொள்ள முடிகிறது.ஒரு தடவை உமர் (ரலி) அவர்கள் கலீபாவாக இருக்கும் காலத்தில் குத்பா பிரசங்கத்தில் பெண்களைப் பார்த்து பெண்களே! உங்களுடைய மஹர் தொகையை குறைவாக கேட்டுக் கொள்ளுங்கள் என்று கூறிய போது சபையிலிருந்த பெண் ஒருவர் எழுந்து நின்று உமர் (ரழி) அவர்களை பார்த்து அல்லாஹ் எங்களுக்கு வழங்கிய உரிமையை நீங்கள் எவ்வாறு குறைக்கும் படி கூற முடியும் என வினவினார்.[25]

இவ்வாறு கலீபாவின் கருத்தை சரி செய்து தங்களுடைய உரிமையை பெற்றுக் கொண்ட சஹாபா பெண்களின் அடிதொட்டு வந்தவர்களா எம்பெண்கள்? எமது பெண்கள் இதனைப் பற்றி நினைப்பதற்கு கூட நேரம் இல்லாமல் வேறு கலாச்சாரங்களுக்கு பின்னால் அடித்துச் செல்லப்படுகிறார்கள் என்பதே கவலையான விடயம்.இதைவிட இன்னும் ஓர் கவலையான

[21] நூல் அஹ்மத்,அறிவிப்பவர்:ஆயிஷா (ரழி) ஹ.இ:24529

[22] ஸஹீஹுல் புகாரி,அறிவிப்பவர்:அப்துல்லாஹ் பின் மஸ்லமா (ரழி) ஹ.இ:2310

[23] ஸஹீஹுல் புகாரி,அறிவிப்பவர்:இப்னு அப்பாஸ் (ரழி) ஹ.இ:428

[24] இஸ்லாத்தில் சீதனம் அனுமதிக்கப்பட்டதா?,M.K.E.அபுல் ஹஸன், பக்:2

[25] இஸ்லாமிய பார்வையில் வரதட்சனை, கா.ஹுஸைன் கனி பாகவி,பக்:52,53

விடயம் என்னவென்றால் பெண்ணின் மஹரை நிர்ணயிக்கும் உரிமையை ஆண் அபகரித்துக் கொண்டதாகும்.

அவ்வாறே இஸ்லாம் பெண்களை மஹரை கொண்டு கண்ணியப்படுத்துகின்றது. திருமணம் என்பது சந்தோஷமான நிகழ்வு. சந்தோஷமான ஒரு நிகழ்ச்சியின்போது நாம் பரிசு வழங்குவோம். அவ்வாறே மனைவியை வரவேற்பதற்கான ஒரு அன்பளிப்பாக மஹர் காணப்படுகின்றது. அதேபோன்று மஹரை நிர்ணயிப்பது மூலம் கணவனை தேர்ந்தெடுக்கும் உரிமையை இஸ்லாம் மனைவிக்கு வழங்கியுள்ளது. இது இஸ்லாத்தின் பெண்ணுக்குள்ள உரிமையை காட்டுகின்றது. மனைவியுடன் இணையும் முன்னரே மஹரை கொடுத்துவிட வேண்டும் என்பதை போதித்த நபியவர்கள் முழுமையாக கொடுக்க முடியவில்லை என்றால் மனைவியின் அனுமதியுடன் குறிப்பிட்ட தவணையில் நிறைவேற்றி விட வேண்டும் என்றும் அனுமதியளித்துள்ளது.

மஹர் பெண்ணுக்குரிய அடிப்படை உரிமை என்பதை உணராத சீதனத்தில் சிக்குண்ட சமூகம் பெண்ணுக்கு மஹர் அளிப்பதனை தாம் செய்யும் தர்மமாக எண்ணிக்கொண்டு மிகவும் அற்பமான தொகையை கொடுத்துவிடுகிறார்கள்.இதனை ஹராமாக பெற்ற சீதனத்தில் இருந்தே வழங்குவது கவலைக்குரிய விடயமாகும். அவ்வாறே பெண்ணிற்கு இருக்கும் உரிமைகளில் ஒன்றுதான் குல்ஊ ஆகும். அதாவது பெண் தனது புறத்திலிருந்து தலாக் சொல்வது ஆகும். இச்சந்தர்ப்பத்தில் பெண் தனக்கு வழங்கப்பட்ட மஹர் தொகையிலிருந்து அரைவாசியை கணவனுக்கு வழங்கும்படி இஸ்லாம் போதிக்கின்றது. இப்படியிருக்க பெண் திருமணம் முடிக்கும் போதே சீதனம் என்ற பெயரில் சொத்துக்களை வாரி வழங்கி விட்டு தனக்கு கிடைத்த அற்பமான சிறிய தொகை மஹரில் இருந்தும் அரைவாசியை வழங்கினால் இது எவ்வகையில் நியாயமானதாகும்.

இவ்வாறு சீதனமானது பல இஸ்லாமிய வழிமுறைகளுக்கு தடையாக அமைகின்றது. சமூகத்தை சீரழிக்கும் இச்சீதனத்தை ஒழிப்பதற்கு மஹர் பெரிதும் பங்கு வகிக்கின்றது.சமூகம் குறிப்பாக பெண்கள் மஹர் பற்றிய புரிதல் தெளிவு அதன் முக்கியத்துவம் போன்றவைகளைஉணர்ந்து செயற்படுகின்ற போது மேலும் மஹரை தமது வாழ்வில் நடைமுறைக்குக் கொண்டு வருகின்றபோது நிச்சயமாக சீதனத்தை எம் சமூகத்தில் இருந்து நீக்க முடியும்.

## 4.3 சீதனமும் அன்பளிப்பும்

அன்பளிப்பு என்பது **“ஒருவர் பிரிதொரு நபருக்கு எந்தவொரு பிரிதொரு உபகாரம் இன்றி வழங்கப்படும் பொருளைக் குறிக்கும்.”[26]**

சீதனமும் அன்பளிப்பும் நேரடியாக தொடர்பு படாவிட்டாலும் சீதனம் அன்பளிப்பு என்ற பெயரில் வழங்கப்படுவதனையும் அன்பளிப்பு சீதனம் என்ற பெயரில் பாவிக்கப்படுவதனையும் எம் சமூகத்தில் காண முடிகின்றது.[27]ஆகையால் அன்பளிப்பு பற்றிய தெளிவு சமூகத்தின் தேவையாக அமைகின்றது.

மனிதர்கள் அனைவரும் எதாவது ஒரு வகையில் மற்றொருவரோடு தொடர்பு கொண்டு தான் இவ்வுலகில் வாழ முடியும்.பிறரோடு தொடர்பே இல்லாமல் எவராலும் வாழ இயலாது, தான் தொழில் செய்யும் போது,அல்லது கடையில் பொருள்கள் வாங்கும் போது,கடன் கொடுக்கும் போது வாங்கும் போது,என ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பிற மனிதர்களை சார்ந்து தான் வாழ இயலும்.

அப்படி வாழும் நம்மிடையே ஒற்றுமையும், பாசமும் மேலோங்க வேண்டும் என்பதற்காக, இஸ்லாம் ஒரு அழகான வழிமுறையை கற்றுத் தருகிறது. அதுதான் அன்பளிப்பு. ஒருவர் பிறருக்கு, நண்பருக்கு அன்பின் காரணமாக ஒரு பொருளையோ,உணவையோ, ஆடையையோ அல்லது வேறு எதையுமோ கொடுப்பது. இதன் காரணமாக அந்த இருவருக்கும் இடையே ஒரு பாசப்பிணைப்பு ஏற்படுகிறது.அதனால் தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்பளிப்பு செய்யுமாறு நமக்கு கட்டளையிட்டுள்ளார்கள்.

**“நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பளிப்பு செய்து நேசத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்”[28]**

[26] அல்-பிக்ஹுல் இஸ்லாமி வஅதில்லதுஹு, கலாநிதி வஹ்பா ஸுஹைலி, பாகம்: 5, பக்: 5

[27] கா.ஹுஸைன் கனி பாகவி, இஸ்லாமிய பார்வையில் வரதட்சனை, பக்:100

[28] ஸஹீஹுல் புகாரி,அறிவிப்பவர்:அபூ ஹுரைரா (ரழி) ஹ.இ:594

பல்லாயிரம் ரூபாய் செய்யாததை இந்த அன்பளிப்பு செய்து விடும். அன்பிற்காக, நேசத்திற்காக ஒரு மனிதன் பிறருக்கு எதை வேண்டுமானாலும் செய்வான்.இந்த அன்பளிப்பை வழங்கும் போது நாம் கடைபிடிக்கவேண்டிய ஒழுங்கு முறைகளை இஸ்லாம் நமக்கு கற்றுத் தருகிறது.

**அன்பளிப்பு பற்றிய புரிதல்**

அன்பளிப்பு என்றால் ஒரு விலை உயர்ந்த செல்போன்,வீடு,கார்,நகைகள் போன்ற பெரிய பொருட்களாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை.அன்பளிப்பு மிகச் சிறியதாகக் கூட இருக்கலாம்.ஒரு பேனாவாகக் கூட இருக்கலாம்.ஒருவர் தன் நண்பருக்கு வாங்கித் தரும் ஒரு டீயாகக் கூட இருக்கலாம்.அதை கொடுப்பதையும்,நாம் அதை வாங்குவதையும் இழிவாக கருதக்கூடாது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

“ஓர் ஆட்டின் விலாவை அல்லது காலை அன்பாகப் பெற்றுக் கொள்ளும்படி நான் அழைக்கப்பட்டாலும் நான் ஏற்றுக் கொள்வேன். எனக்கு ஓர் ஆட்டின் விலா அல்லது கால் அன்பாகத் தரப்பட்டாலும் சரி! நான் அதைப் பெற்றுக் கொள்வேன் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.”[29]

**முதலில் யாருக்கு அன்பளிப்புச் செய்வது?**

இரண்டு நண்பர்கள் இருந்தால் நெருங்கியவருக்குத் தான் முதலில் தரவேண்டும். நெருங்கியவரை புறக்கணித்து மற்றவர்களுக்கு தருவதை நபியவர்கள் வழிகாட்டவில்லை.

“நான் நபியவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே! எனக்கு இரண்டு அண்டை வீட்டுக்காரர்கள் உள்ளனர். அவர்களில் யாருக்கு நான் (முதல்) அன்பளிப்பு செய்வது என்று கேட்டேன். அதற்கு நபியவர்கள் அவ்விருவரில் யாருடைய வாசல் உன்வீட்டுக்கு அருகில் உள்ளதோ அவருக்கு அன்பளிப்புசெய் என்றார்கள்.”[30]

எனவே,நம் வீட்டில் ஒரு சுவையான உணவை சமைத்தால்,அதை வாய்ப்பு கிடைக்கும் நேரங்களிலெல்லாம் அண்டை வீட்டாருக்கு,நண்பர்களுக்கு சிறிதளவாவது கொடுத்து அன்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**சொல்லிக் காட்டக் கூடாது.**

அன்பளிப்பாக இருந்தாலும் சரி, தர்மமாக இருந்தாலும் சரி அதனை ஒருபோதும் சொல்லிக்காட்டக் கூடாது.இதை அல்லாஹ் கடுமையாக எச்சரிக்கிறான்.சொல்லிக் காட்டுவதால் ஏற்படும் வெறுப்பு ஒருபோதும் நீங்காது.அதற்கு பிறகு அவர் எந்த அன்பளிப்பையும் நம்மிடமிருந்து பெறவும் மாட்டார்.நான்கு பேருக்கு மத்தியில் வைத்து சொல்லிவிட்டார் என்று வேதனைப்படவும் செய்வார்.அதனால் தான்,இதை அல்லாஹ் கடுமையாக எச்சரிக்கிறான்.

“நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பாது மக்களுக்குக் காட்டுவதற்காக தனது செல்வத்தைச் செலவிடுபவனைப் போல்,உங்கள் தர்மங்களைச் சொல்லிக் காட்டியும், தொல்லை தந்தும் பாழாக்கி விடாதீர்கள்!இவனுக்கு உதாரணம் **மேலே மண் படிந்திருக்கும் வழுக்குப் பாறை.அதன் மேல் மழை விழுந்ததும் மேலே ஒன்றுமில்லாமல் ஆக்கி விடுகிறது**.தாம் பாடுபட்ட எதன் மீதும் அவர்கள் சக்தி பெற மாட்டார்கள்.(தன்னை) மறுக்கும் கூட்டத்திற்கு அல்லாஹ் நேர் வழி காட்ட மாட்டான்.”[31]

அவனை நேசித்ததற்காக ஏழைக்கும்,அனாதைக்கும்,சிறைப்பட்டவருக்கும் உணவளிப்பார்கள்.அல்லாஹ்வின் முகத்துக்காகவே உங்களுக்கு உணவளிக்கிறோம். உங்களிடமிருந்து பிரதிபலனையோ,நன்றியையோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை எங்கள் இறைவனிடமிருந்து கடுமையும்,நெருக்கடியும் நிறைந்த நாளை நாங்கள் அஞ்சுகிறோம் (எனக்

[29] ஸஹீஹுல் புகாரி, அறிவிப்பவர்:அபூ ஹுரைரா (ரழி) ஹ.இ:2568

[30] ஸஹீஹுல் புகாரி,அறிவிப்பவர்:ஆயிஷா (ரழி) ஹ.இ:2594

[31] சூறா பகரா:264

கூறுவார்கள்.)எனவே அந்த நாளின் தீங்கிலிருந்து அவர்களை அல்லாஹ் காப்பாற்றினான்.அவர்களுக்கு முகமலர்ச்சியையும், மகிழ்ச்சியையும் வழங்கினான்.[32]

**திரும்பிப் பெறக்கூடாது.**

அன்பளிப்பை ஒருவருக்கு கொடுத்துவிட்டால் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி பெறவேண்டும் என்று நினைக்கவே கூடாது.அது எவ்வளவு முக்கியமான பொருளாக இருந்தாலும் சரி.கொடுப்பதற்கு முன்னால் எவ்வளவு வேண்டுமானாலும் யோசித்துக் கொள்ளுங்கள்.ஆனால் கொடுத்த பிறகு,அது உங்களுடையது அல்ல. அவர்களுடையது. நீங்கள் கேட்டுவிட்டீர்கள் என்பதற்காக,வேறு வழியில்லாமல் தருகிறார்.தரும் போது பிச்சைகாரன் கொடுத்துவிட்டு திருப்ப கேட்கிறான் என்று நம்மை கேவலமாக கருதவும் செய்வார்.அதனால் தான் நபியவர்கள் கூறுகிறார்கள்.

தன் அன்பளிப்பை திரும்பப் பெற்றுக் கொள்பவன்,தன் வாந்தியைத் தானே திரும்பத் தின்கின்ற நாயைப் போன்றவன் ஆவான்.(இது போன்ற) இழிகுணம் நமக்கு முறையல்ல. என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.[33]

அன்பளிப்பை திரும்ப பெறக்கூடாது.என்றாலும் தந்தை மட்டும் தன் மகனுக்கு செய்த அன்பளிப்பை பெற்றுக் கொள்ள இஸ்லாம் அனுமதி வழங்கியுள்ளது. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்‘‘அன்பளிப்பை கொடுத்து அதனை திரும்பப்பெறுவது ஒரு தந்தை தன்மகனுக்கு கொடுக்கின்ற விஷயத்தில் தவிர எந்த ஒரு முஸ்லிமுக்கு அது ஹலால் (அனுமதி)இல்லை’’[34]

**பிள்ளைகளுக்கு நீதமாக அன்பளிப்புச் செய்தல்**

அன்பளிப்பு செய்வதில் அனைத்து குழந்தைகளிடம் பாரபட்சம் இல்லாமல் நடந்து கொள்ளவேண்டும்.

நு.ஃ.மான் பின் பஷீர்(ரழி)அவர்களை அவர்களுடைய தந்தை நபியவர்களிடம் அழைத்துச்சென்று எனக்கு செந்தமான அடிமையை எனது இந்த மகனுக்கு அன்பளிப்புச்செய்கின்றேன் என்று சொன்னார்கள். அதற்கு நபியவர்கள் உன்பிள்ளைகள் அனைவருக்கும் இதைப்போன்று அன்பளிப்பு செய்துள்ளீரா? என்று கேட்க,அதற்கு அவர் இல்லை என்றார்.அதற்கு நபியவர்கள் அவ்வாறெனில் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்.உங்கள் பிள்ளைகளுக்கு இடையில் நீதமாக நடந்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். இதைக் கேட்ட அவர் உடனே வந்து அன்பளிப்பை ரத்து செய்தார்.[35]

**பிரதி உபகாரம்**

நபியவர்களோ அன்பளிப்புப் பொருளை வாங்குவதோடு மட்டும் இல்லாமல் அதற்கு பிரதி உபகாரம் செய்பவர்களாக இருந்துள்ளார்கள்.எனவே,காலம் முழுவமும் வாங்கிக் கொண்டே இருக்கக் கூடாது.வாய்ப்பு கிடைக்கும் போது.பிரதிஉபகாரம் செய்ய வேண்டும்.

‘‘நபியவர்கள் அன்பளிப்பை வாங்குபவர்களாகவும் அதற்கு பதில் உபகாரம் செய்பவர்களாகவும் இருந்தார்கள்.’’[36]

ஏழைகள் தரும் சிறிய அன்பளிப்பு சிறிதாக இருந்தாலும் அந்த அன்பளிப்பையும் முகமலர்ந்து ஏற்க வேண்டும்.

நபியவர்கள் கூறினார்கள்.முஸ்லிமான பெண்களே! ஒரு அண்டைவீட்டுக்காரி மற்ற அண்டை வீட்டுக்காரிக்கு ஒரு ஆட்டின் கால் குளம்பை (அன்பளிப்பாக) கொடுத்தாலும் அவள் அலட்சியம் செய்யவேண்டாம்.[37]

மேற்கூறிய விடயங்களில் இருந்து அன்பளிப்பின் அவசியத்தையும் அது பற்றிய தெளிவான புரிதலையும் பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆனால் எம் சமூகத்தில் சீதனம் என்று கருத்து

---

[32] சூறா அன்பால்:76

[33] ஸஹீஹுல் புகாரி,அறிவிப்பவர்:இப்னு அப்பாஸ் (ரழி) ஹ.இ:2622

[34] திர்மிதி, அறிவிப்பவர்:இப்னு அப்பாஸ் (ரழி) ஹ.இ:1220

[35] ஸஹீஹுல் புகாரி,அறிவிப்பவர்:நு.ஃ.மான் பின் பஷீர் (ரழி) ஹ.இ:2586

[36] ஸஹீஹுல் புகாரி,அறிவிப்பவர்:ஆயிஷா (ரழி) ஹ.இ:2585

[37] ஸஹீஹுல் புகாரி,அறிவிப்பவர்:அபூ ஹுரைரா (ரழி) ஹ.இ:2566

அதிகரித்ததன் காரணமாக இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட அன்பளிப்பு இன்று சமூகத்தில் இருந்து மங்கி மறைந்து விட்டது.உதாரணமாக ஒரு தந்தை தனது மருமகனுக்கு ஏதாவது ஒரு அன்பளிப்பை தூய்மையான எண்ணத்துடன் வழங்கும்போது அது எவ்வகையில் சீதனமாகும்?அது எவ்வகையில் குற்றமாகும்?

ஆனால் சிலர் இதனை இலஞ்சமாக பார்க்கின்றனர் அதாவது எப்படியாவது தனது மகளுக்கு இவரை மருமகனாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காக அன்பளிப்பு வழங்கினால் அது அன்பளிப்பாக கருதப்படமாட்டாது.அவ்வாறில்லாமல் தூய மனதுடன் ஒரு அன்பளிப்பை வழங்குகின்ற போதும் இஸ்லாத்தில் அனுமதி உண்டு.

அறிவு ரீதியாக சிந்தித்தால் எப்போதும் ஒரு தந்தை தனது மகள் அல்லது மகன் கஷ்டப்படுவதை விரும்பமாட்டார். தந்தை அவ்வாறு தனது பிள்ளைகளை கஷ்டத்தில் விட்டுவிட்டு வாழ விரும்ப மாட்டார். இவ்வாறு வாழ்கின்ற பெற்றோர் தனது மகளுக்காக வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது எவ்வகையிலும் சீதனமாக அமையாது. அவ்வாறு மருமகனுக்கும் ஏதாவது செய்வது சீதனமாகவோ அல்லது இலஞ்சமாகவோ அமையாது. மாறாக அன்பளிப்பாக இஸ்லாத்தில் அனுமதிக்க கூடியதாக கருதப்படுகின்றது.அதற்கு நபி (ஸல்) அவர்கள் பாத்திமா (ரலி) அவர்களுக்கு கொடுத்த அன்பளிப்பு சாட்சியாக உள்ளது என்பதை பின்வரும் ஹதீஸ் மூலம் தெரிந்துக் கொள்ளலாம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மகள் பாத்திமாவை திருமணம் முடித்துக் கொடுத்த போது ஒரு கனமான போர்வை,(தண்ணீர் பிடித்து வைத்துக் கொள்ளும்) ஒரு தோல் துருத்தி,இத்கிர் என்ற புல் சருகு அடைக்கப்பட்ட ஒரு தலையனை ஆகியவற்றைக் கொடுத்து அனுப்பினார்கள் என்று அலி (ரழி) அறிவிக்கிறார்கள்.[38]

இது பெண் பிள்ளைக்கு மாத்திரமல்ல.ஆண் பிள்ளையாக இருந்தாலும் சரியே. ஆனால் பிள்ளைகளுக்கு மத்தியில் நீதியாக நடந்து கொள்வது பெற்றோரின் கடமையாகும். பிள்ளைகளுக்கு மத்தியில் பெற்றோர் பாரபட்சம் காட்டுவது இஸ்லாத்தில் தடுக்கப்பட்டதாகும்.

வரதட்சணையைத் தடுக்கும் இஸ்லாம் அப்பெண்ணிற்காக அவளது தந்தை மனமுவந்து கொடுக்கும் அன்பளிப்புகளை அனுமதித்துள்ளது.. மேற்கூறிய விடயங்களை கொண்டு அன்பளிப்பு அடிப்படையில் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டது.அதனை சூழ்நிலைகளை வைத்து தீர்மானிக்க வேண்டும். இவ்வாறு தெளிவான புரிதல் சமூகத்தில் வழங்கப்பட்டால் நிச்சயமாக சீதனம் சமூகத்திலிருந்து மறைந்துவிடும்.

## முடிவுரை

மேற்குறித்த ஆய்வின் பின்னணியில் நோக்குகின்ற போது இஸ்லாமிய ஷரிஆவில் சீதனம் என்பது மிகவும் பாவகரமான செயன்முறையாகும். அதேபோல அது எமது சமூகத்தில் புரையோடிப் போயிருப்பதும் புலனாகிறது. எனவே, இவ்வாய்வின் ஊடாக பின்வரும் முடிவுகளைப் பெற முடியும்.

1. சீதனம் என்பது பெண் வீட்டாரிடம் இருந்து மணமகன் கேட்டுப்பெறும் பணம்,நகை அல்லது சொத்து போன்ற அனைத்தையும் குறிக்கும்.இது திருமணத்தின் போதோ அல்லது அதன் பிறகோ இடமட பெறலாம்.
2. சீதனத்திற்கு இஸ்லாத்தில் எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை.இஸ்லாத்திற்கு அப்பாற்பட்ட விடயம் அனைத்தும் வழிகேடாகும்.அவை நரகத்திற்கு இட்டு செல்லும்.
3. சீதனத்திற்கான அடிப்படை காரணி இஸ்லாம் காட்டித் தந்துள்ள செல்வப் பங்கீட்டிற்கான வழிமுறைகளை பின்பற்றாமையாகும்.
4. இஸ்லாம் செல்வப்பங்கீட்டிற்கான வழிகாட்டல்களாக வாரிசுரிமை, வஸிய்யத், அன்பளிப்பு போன்றவற்றை குறிப்பிடுகின்றது.
5. மரணத்திற்கு முன்னர் ஒருவர் தனது சொத்தை பங்கிட நாடினால் அவருக்கு அனுமதியுண்டு.
6. சீதன ஒழிப்பில் மஹர்,வாரிசுரிமை பெரிதும் பங்களிப்பு செய்கின்றன.

[38] நஸாஈ,அறிவிப்பவர்:அலி (ரழி) ஹ.இ:3331

7. பெண்ணை நிர்ப்பந்திக்காமல் பெண்ணுடைய விருப்பத்தில் பெண்ணின் வீட்டில் கணவன் இருக்க முடியும்.
8. பெண்ணின் வாரிசுச் சொத்தை அனுபவிக்க கனவனுக்கு அனுமதியுன்டு.
9. பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் செல்வப்பங்கீட்டின் போது நீதி, சமத்துவம் பேணப்பட வேணடும்.
10. நல்ல எண்ணத்துடன் மணமகனின் தந்தை மருமகனுக்கு அன்பளிப்பு வழங்க முடியும்.

## முன்மொழிவுகளும், பரிந்துரைகளும்

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் இச்சீதனத்திற்கு இரண்டு அடிப்படையிலே தீர்வு காணலாம்.

### 1. ஆன்மீக ரீதியான நடைமுறைகள்.

இஸ்லாத்தின் பார்வையில் உளரீதியான மாற்றமே மனிதன் சீர்பட அவசியமாகும். தனிமனித, சமூக, ரீதியான மாறுதல்கள் வாழ்க்கை ஒழுங்கை மாற்ற உதவுமே தவிர தீமைகளை களைய உதவாது.இது தொடர்ச்சியான பயிற்றுவிப்பு தியாகம் என்பனவற்றை வேண்டி நிற்கும் செயற்பாடாகும். அவ்வகையில்,

1. சீதனம் குறித்த விரிவான பிரச்சாரம் தேவை.
2. சீதனத்தின் தீமைகள் படம் பிடித்து காட்டப்படவேண்டும்.
3. சமூகத்தில் ஒரு சிலர் சீதனத்தை விட்டு முழுமையான முன்மாதிரி வாழ்வொன்றை வாழ்ந்து காட்ட வேண்டும்
4. இஸ்லாமிய திருமணச் சட்டங்களின் அடிப்படையிலான எளிய திருமணங்களை ஊக்குவித்தல்.

### 2. சமூக ரீதியான திட்டமிடல்கள்

சீதனம் ஓர் பாரிய சமூகப் பிரச்சினையாகும். இது சமூகத்தில் அடி மட்டம் வரைபுரையோடிப் போயுள்ளதால் இதனை நடைமுறைச் சாத்தியமற்ற இலட்சியவாத உலகிலிருந்து நோக்க முடியாது.அத்தோடு இதற்கு உடனடித் தீர்வும் கிடையாது.பல படிமுறைகளைக் கொண்ட திட்டமிடல்கள் வேண்டும்.எனவே, இதற்கான நுணுக்கமான சமூக ரீதியான செயற்திட்டங்கள் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.இச்செயற்திட்டமானது இருவகையில் அமைந்திருக்கலாம்.

#### 1. குறுங்கால செயற்திட்டம்

சீதனமின்றி திருமணம் செய்வோருக்கான வீட்டுப் பிரச்சினையை தீர்ப்பதற்கான ஒரு தீர்வு திட்டத்தை ஊரின் பொது நிருவனங்கள் மற்றும் இயக்கங்கள் என்பன இணைந்து மேற்கொள்ளுதல்.உதாரணமாக வீட்டுக்கடன் திட்டம், (இதற்காக இஸ்லாமிய பொருளாதார திட்டங்களை முடியுமான அளவு நடைமுறைப்படுத்தல். கூட்டு ஸகாத் நிதியம்,பைத்துல்மால் நிதியம், வக்பு நிதியங்கள்,தனியார் நிதி நிருவனங்கள்.)

திருமண ஏற்பாடுகளின்போது பெற்றோர் தமது பிள்ளைகளுக்காக வாழும் சில ஏற்பாடுகளை செய்து கொடுத்தல். இதனை இஸ்லாம் ''தஜ்ஹீத்'' என்று கூறுகின்றது. உதாரணமாக சில தளபாடங்கள்,ஆபரணங்கள்,ஆடைகள் வழங்குவதனைக் குறிக்கும். இவை முழுமையாக சொந்தமாகவோ தற்காலிகமாகவோ அல்லது கைமாறாகவோ வழங்கலாம்.இது திருமணம் முடிக்கவுள்ள ஆணுக்கு மிக அவசியமானதாகும். ஏனெனில் திருமணம் முடிக்கும் போது வீடு கட்டும் வசதி கொண்டவராக இருக்க மாட்டார்.

இலங்கையைப் பொறுத்தவரை ஒப்பீட்டில் சீதனம் கூடுதலாக உள்ள பகுதியினர் தமது ஊரைத் தாண்டி வெளியூர்களில் திருமணம் செய்வதனை தூண்டுதல்.

#### 2. நீண்டகால செயற்திட்டம்

இஸ்லாத்தின் வாரிசுரிமை சட்டத்தினை மிகச் சரியாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் சீதனத்தினை இல்லாது செய்தல்.இதற்காக இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தினை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதோடு அதன் சிறப்பம்சங்கள்,முக்கியத்துவங்களையும் தெளிவுபடுத்த வேண்டும்.இஸ்லாம் காட்டித்தந்த செல்வப்பங்கீட்டு முறையை முஸ்லீம்கள் நடைமுறைப்படுத்தாமையே சீதனம் தோன்றுவதற்கு அடிப்படை காரணமாகும்.இதுவே இவ் ஆய்வின் மையப் பொருளாகையால் இதனை மிகத்தெளிவாக நாம் விளக்க வேண்டும்.

## உசாத்துணைப் பட்டியல்


1. மௌலானா மௌதூதி, தப்ஹீமுல் குர்ஆன், தமிழில்: டி.அஜீஸ் லுத்புல்லாஹ், இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்.
2. ஸையத் ஸாபிக், பிக்ஹுஸ் ஸுன்னா, பாகம்:3, தாருல் பிக்ர்.
3. முஹம்மத் அபூ ஸஹ்ரா, அஹ்காமுத் தரிகாத் வல்மவாரீத், தாருல் பிக்ருல் அரபி.
4. அல்-ஜப்வரீ, ஹுக்முல் மீராத் பி அஷ்ஷரீஆ அல்-இஸ்லாமியா, தாருந் நகாவத் அல்-ஜகீகாத்-(லெபனான்), பதிப்பு :3.
5. யூஸுப் அல்-கர்ழாவி, பிக்ஹுல் உஸ்ரா வகழாயா அல்-மர்ஆ, அத்தார் அஷ்ஷாமிய்யா, பதிப்பு:1.
6. ஹஸன் அய்யூப், பிக்ஹுல் உஸ்ரா அல்முஸ்லிமா, தாருஸ்ஸலாம்.
7. வஹ்பா ஸுஹைலி, அல்-பிக்ஹுல் இஸ்லாமி வஅதில்லதுஹு, பாகம்:5.
8. அரபாத் கரீம், இஸ்லாத்தில் வாரிசுரிமைச் சட்டம், நஹ்ழா பதிப்பகம்.
9. முஹம்மது ஷ∴பி, இஸ்லாத்தில் செல்வப்பங்கீடு, பைதுல்மால் நிதியம், நாவலப்பிட்டி.
10. M.K.E.அபுல் ஹஸன், இஸ்லாத்தில் சீதனம் அனுமதிக்கப்பட்டதா?, பதிப்பு:2.
11. கா.ஹுஸைன் கனி பாகவி, இஸ்லாமிய பார்வையில் வரதட்சனை, அமீரா பதிப்பகம்.
12. எல்.எம்.ஏ. முகம்மது புகாரி, திருச்சி, வரதட்சணை – ஒரு யதார்த்த ஆய்வு.
13. எஸ்.அப்பாஸ் அலி, வரதடசனை ஓர் வன்கொடுமை.
14. சுஹீரா.எம்.வை.எம்., 2004, முறையற்றசொத்துப் பங்கீடும் சமூகச் சிதைவுகளும்,இதழ்-5, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்: தமிழ்ச் சங்கம்.
15. ஹைருன்னிஸா.எம்.எல்., 2011, சீதனம் சீரழிக்கிறது, உண்மை உதயம், உண்மை-57,உதயம்-163, பரகஹதெனிய: ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா. பக்.47-50.
16. இக்வான் அமீர்,2006, வரதட்சணையின் கோரமுகம் விலை பொருளா பெண்கள்?, சமரசம், பக்.12-13.
17. ஹுஸைன் பாகவி, 2006, வரதட்சணைக்கான தீர்வுகள், சமரசம், பக்.14-15.
18. பாத்திமா ஜெஸீலா,2000, பெண்களை வதைக்கும் வரதட்சணை, அல்ஹஸனாத், இதழ்-6 மலர்- 26, கொழும்பு: இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி, பக்.23.
19. எம்.ஐ.எம்.ஜஸீல், எம்.ஐ.றினோஸா, முஸ்லிம் திருமணத்தில் மஹரும் அன்பளிப்பும், கலமுனைக்குடி பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு.
20. எம்.ஏ.எஸ்.எப்.ஸாதியா பௌஸர், எஸ்.ஏ.பெரோஸியா, இலங்கை முஸ்லிம் சமூகத்தில் சீதனமும் அதன் நடைமுறையும்,அம்பாரை மாவட்டத்தை மையப்படுத்திய ஆய்வு.
21. https://sites.google.com/site/mrlalbajilal/a-4.
22. https://eluthu.com/kavithai/364664.html.
23. http://www.islamiyapenmani.com/2015/04/blog-post_20.html?m=1.
24. http://aleemqna.blogspot.com/2014/06/blog-post_9483.html?m=1.
25. https://www.islamkalvi.com/?p=4631.